**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS NO. 54/2017**

| | |
|---|---|
| Name:. பழனி | Caste: |
| Father's Name: **வரதன்**<br>Husband Name :. | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day | |

**17.04.2025**

**பி.வா.சா. 1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மட்டுமல்லாத கன்னி கவுண்டரின் மற்ற சொத்துக்களையும் சேர்த்து தான் குடும்ப ஏற்பாட்டு முறையிலான பாகப்பிரிவினை செய்து கொண்டதாக நான் சொல்கிறேன். ஆனால் அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பரசுராமனின் மகன் தான் என்னுடைய அப்பா வரதன் என்றால் சரிதான். வரதன் என்பவருடன் பிறந்த சகோதரிகள், சகோதரர்கள் தான் சின்னம்மாள், தேனம்மாள், குட்டியம்மாள், முனுசாமி, சகாதேவன் என்றால் சரிதான். இவர்கள் அனைவரும் பரசுராமனின் வாரிசுகள் என்றால் சரிதான்.

தாவா சொத்தை கன்னி கவுண்டர் கிரையம் பெற்ற பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். கிரையதாரர்கள் சம்மந்த முதலியார், சின்னம்மாள் என்றால் சரிதான். தாவா சொத்தில் 5 அட்டவணைகளாக தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தையின் இறப்பு சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்துக்களில் எத்தனை சொத்துக்கு எனது தந்தை வரதன் பெயரில் பட்டா உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சர்வே எண். 528/2டி – 0.67 செண்ட், 528/2இ – 0.05 செண்ட். அந்த பட்டா எண். 981 ஆகும். என் தந்தை வரதன் பெயரில் பட்டா மாற்றம் செய்வதற்கு என்னென்ன ஆவணங்களை தாக்கல் செய்து வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் அப்போது பிறக்கவில்லை. குடும்ப ஏற்பாட்டு பாகப்பிரிவினை யாருக்கும் யாருக்குமிடையே ஏற்பட்டது என்றால் சந்தியப்ப நாயக்கர், வரதன், மற்றும் ஏழுமலை ஆகியோருக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆகும்.

மேற்படி பாகப்பிரிவினை பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது அப்பா எனக்கு கூறியதன் பேரில் எனக்கு தெரியும். நேரடியாக எனக்கு தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை சந்தியப்ப நாயக்கர், வரதன், மற்றும் ஏழுமலை ஆகியோருக்கிடையே ஏற்பட்டது என்பதை நான் எனது வாக்குமூலத்திலோ அல்லது பதிலுரையிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் பெயர்களை குறிப்பிட்டு நான் சொல்லவில்லை. எனது அப்பா குறிப்பிட்டு தான் எனக்கு இந்த பாகப்பிரிவினை பற்றிய விவரம் தெரியும் என்று நான் என் வாக்குமூலத்திலோ அல்லது பதிலுரையிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

கன்னி கவுண்டரின் மகனான பரசுராமனுக்கு 3ல் 1 பாகம் பங்கு உள்ளது என்றால் உண்டு. பரசுராமனின் வாரிசுகளுக்கு அந்த 3ல் 1 பாகம் உரிமை உண்டா என்றால் உண்டு தான். ஆனால் பரசுராமனின் வாரிசுகள் வரதன் பெயரில் கூர்சீட்டு மூலம் அவரது பங்குகளை எழுதிக் கொடுத்து விட்டனர். மேற்படி கூர்சீட்டு மூலம எழுதிக் கொடுத்த விவரத்தை நான் வாக்குமூலத்திலோ அல்லது பதிலுரையிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. பரசுராமனின் வாரிசுகளான முனுசாமி, குட்டியம்மாள்,

சகாதேவன் அவர்களுடைய வாரிசுகள் வாதிகளிடத்திலோ, எங்களிடத்திலோ தாவா சொத்து குறித்து பிரச்சனைகள் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் 05.05.1976 ம் ஆண்டு பிறந்தேன். என் தந்தை பெயரிலான பட்டா எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தோராய வரைபடத்தை பார்த்துள்ளேன். அந்த தோராய வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண். விஸ்தீரணம், திசைகள் ஆகியவை சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் 2 டி மற்றும் 2 இ லிருந்து வடக்கு பக்கமாக சரியாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது பாகப்பிரிவினை சந்தியப்ப நாயக்கர், வரதன், மற்றும் ஏழுமலை ஆகியோருக்கிடையே ஏற்பட்டது என நான் கூறுவது இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பரசுராமனின் வாரிசுகள் எனது தந்தை வரதனுக்கு கூர்சீட்டு மூலம் அவர்களது பாகத்தை எழுதிக் கொடுத்ததாக நான் குறிப்பிட்டது இந்த வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து மட்டும் தான் கூர்சீட்டு மூலமாக என் தந்தை வரதனுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வரதனுக்கு அவருடைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் தாவா சொத்துடன் மற்ற சொத்துக்களையும் சேர்த்து தான் எழுதிக் கொடுத்தார்கள். மேற்படி கூர்சீட்டு மூலம் பெற்ற சொத்துக்களை என் தந்தை பதிவு செய்து கொண்டாரா என்றால் இல்லை.

(வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)